### சேலம் மத்திய மாவட்ட பகுதி, ஒன்றிய, பேரூர் அளவிலான

# பாக முகவர்கள் - பூத் கமிட்டி உறுப்பினர்கள் - நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் இரா.இராஜேந்திரன் அறிவிப்பு!

சேலம், நவ.9-

சேலம் மத்திய மாவட்டச் செயலாளர் - அமைச்சர் இரா.இராஜேந்திரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தலைமைக் கழகத்தால் அறிவிக்கப்பட்ட தொகுதி பார்வையாளர்களின் அறிமுகக் கூட்டம் மற்றும் தொகுதி அளவிலான நிர்வாகிகள், பாக முகவர்கள் (BLA2) மற்றும் பூத்கமிட்டி உறுப்பினர்கள் (BLC) கூட்டம் ஆகியவை நடந்து முடிந்த நிலையில் சேலம் வடக்கு, சேலம் தெற்கு மற்றும் ஓமலூர் சட்டமன்றத் தொகுதிகளுக்கு உட்பட்ட பாக முகவர்கள் (BLA2), பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC) மற்றும் நிர்வாகிகள் கலந்து கொள்ளும் கூட்டம் பார்வையாளர்கள் பார். இளங்கோவன், ஈ.ஜி.சுகவனம் மற்றும் டாக்டர் விவேக் ஆகியோரின் தலைமையில் கீழ்க்கண்ட



படி நடைபெறும், இக்கூட்டத்தில் அந்தந்த பகுதிக்குட்பட்ட தேர்தல் பொறுப்பாளர்கள், பாக முகவர்கள் (BLA2), பூத்கமிட்டி உறுப்பினர்கள் (BLC) மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளிட்ட அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டம் நடைபெறும் நாள் - பகுதி / பேரூர் விவரம் வருமாறு:-

**சேலம் வடக்கு சட்டமன்றத் தொகுதி**

09.11.2024 சனிக்கிழமை - மாலை 04 மணி- கன்னங்குறிச்சி பேரூர், மாலை 06 மணி -அஸ்தம்பட்டி பகுதி,

10.11.2024 ஞாயிற்றுக் கிழமை - பொன்னம்மா பேட்டை பகுதி, நண்பகல் 12 மணி -

அரிசிபாளையம், மாலை 04 மணி - குமாரசாமிபட்டி பகுதி, மாலை 06 மணி - செவ்வாய்பேட்டை பகுதி

**ஓமலூர் சட்டமன்றத் தொகுதி காடையாம்பட்டி ஒன்றியம்**

11.11.2024 திங்கள் கிழமை - காலை 09 மணி - பண்ணப்பட்டி, காலை 10 மணி - காடையாம் பட்டி பேரூர், நடுப்பட்டி, தீவட்டிப்பட்டி, குண்டுக்கல், காலை 11 மணி- பொம்மியம்பட்டி- பொம்மியம் பட்டி, வேப்பிலை உப்பிளிக்கம்பட்டி,

நண்பகல் 12 மணி - கணவாய்புதூர் டேனிஷ் பேட்டை, மாலை2 மணி - கஞ்சநாயக்கன்பட்டி- கஞ்சநாயக்கன்பட்டி,தாராபுரம், மாலை 5 மணி- காருவள்ளி செம்மாண்டப்பட்டி,மூக்கனூர், கொங்குப்பட்டி.

**ஓமலூர் சட்டமன்றத் தொகுதி ஓமலூர் ஒன்றியம்**

12.11.2024 செவ்வாய்க் கிழமை-காலை 10 மணி- செவ்வாய்சந்தை சமுதாய கூடம் - ஓமலூர் கிழக்கு ஒன்றியம், ஓமலூர் பேரூர், நண்பகல் 12 மணி - பல்பாக்கி சமுதாய கூடம் - ஓமலூர் வடக்கு ஒன்றியம், மாலை 3 மணி - மல்லிக்குட்டை சமுதாய கூடம் - தாரமங்கலம் கிழக்கு ஒன்றியம், மாலை 5 மணி - ஏ.சி.எஸ். திருமண மண்டபம் சிக்கம்பட்டி - ஓமலூர் தெற்கு ஒன்றியம்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

---

### திருவாரூரில் விளையாட்டு மேம்பாட்டு அணி -

# தகவல் தொழில்நுட்ப அணி அறிமுக ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் அறிவிப்பு!

திருவாரூர், நவ. 9-

திருவாரூர் மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி மற்றும் தகவல் தொழில்நுட்ப அணி ஆகியவற்றின் அறிமுக ஆலோசனை கூட்டங்கள் குறித்து மாவட்டக் கழகச் செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவர் தம் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது:-

"திராவிட நாயகர், தமிழ்நாடு முதல்வர், கழகத்தலைவர் அவர்களால், துணை முதல்வர், இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வாழ்த்துக்களோடு பொறுப்பு வழங்கப்பட்ட திருவாரூர் மாவட்டத்தின் ஒன்றிய, நகர, பேரூர்க் கழகங்களின் தகவல் தொழில்நுட்ப அணி புதிய நிர்வாகிகளின் அறிமுக ஆலோசனை கூட்டம் இன்று (09.11.2024 - சனிக்கிழமை) காலை 10.00 மணிக்கு திருவாரூர் வர்த்தகர் சங்க கட்டிடத்திலும், திருவாரூர் மாவட்டத்தின் ஒன்றிய,



நகர, பேரூர் கழகங்களின் விளையாட்டு மேம்பாட்டு அணியினரின் புதிய நிர்வாகிகளின் அறிமுக கூட்டம் 10.11.2024 ஞாயிறு அன்று காலை10.00 மணியளவில் ஹோட்டல் காசீஸ் இன் - குறிஞ்சி அரங்கிலும் நடைபெற இருக்கிறது.

அதுசமயம் இரு அணிகளின் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழகங்களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாது பங்கேற்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

---

### கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட

# சட்டமன்றத் தொகுதிப் பொறுப்பாளர்கள், வாக்குச்சாவடி முகவர்கள் அறிமுகக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் பிரகாஷ் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது!

கிருஷ்ணகிரி, நவ. 9 -

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம், ஒசூர், தளி, வேப்பனப்பள்ளி சட்டமன்றத் தொகுதிகளுக்கான மேலிட பொறுப்பாளர்கள், பாக முகவர்களுக்கான கூட்டம் ஒசூர், தேன்கனிக்கோட்டை, சூளகிரியில் நடைபெற்றது.

ஒசூரில் மீரா மஹாலில் நடைபெற்ற கூட்டத்திற்கு மேயர் சத்யா வரவேற்புரை ஆற்றினார்.

தேன்கனிக்கோட்டை சப்தகிரி திருமண மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்திற்கு பேரூர்க் கழகச் செயலாளர் சீனிவாசன் வரவேற்புரையாற்றினார்.

சூளகிரியில் எஸ்.ஏ.எஸ் திருமண மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்திற்கு ஒன்றியச் செயலாளர் பாக்யராஜ் வரவேற்புரை ஆற்றினார்.

இந்த கூட்டங்களில் தேர்தல் பொறுப்பாளர்கள் வடிவேல், தர்மசீலன், முருகானந்தம் ஆகியோரை அறிமுகப்படுத்தி கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட செயலாளரும், ஒசூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான பிரகாஷ் தலைமையேற்று சிறப்புரையாற்றினார்.

தலைமைக் கழக அறிவிப்பின்படி ஒன்றிய, பேரூர் வாரியாக BLA2 ஆய்வு கூட்டங்கள், ஊராட்சி, வார்டு வாரியாக கூட்டங்கள் நடத்துவது 16.11.24, 17.11.24 மற்றும் 23.11.24, 24. 11.24 ஆகிய தேதிகளில் நடைபெறும் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்கல், சரிபார்த்தல் பணிகள் மேற்கொள்வது தொடர்பாக விளக்கப்பட்டது.

இந்த கூட்டங்களில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான முருகன், மாநில இளைஞர் அணி துணை செயலாளர் சீனிவாசன், மாவட்ட அவைத் தலைவர் யுவராஜ், துணை மேயர் ஆனந்தையா, மாவட்டத் துணை செயலாளர்கள் சின்னசாமி, பொருளாளர் சுகுமாரன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் வீராரெட்டி, எல்லோரா மணி, கிரிஷ், பொதுக்குழு உறுப்பினர்கள் சீனிவாசன், தனலட்சுமி, ஜெயராமன், முனிராஜ், அப்துல் கலாம், மாவட்ட ஊராட்சி குழு துணை தலைவர் ஷேக் ரஷீத்,

ஒன்றிய, பேரூர்ச் செயலாளர்கள் சீனிவாசலு ரெட்டி, திவாகர், நாகேஷ், கஜேந்திரமூர்த்தி, ரகுநாத், சின்ராஜ், கருணாகரன், ராஜா, ஸ்ரீதர், தணிகாசலம், தஸ்தகீர் உள்ளிட்ட நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், கழக தோழர்கள் கலந்து கொண்டனர்.

---

# ஆண்டியும் போண்டியும்



**ஆண்டி :** ஏன்யா; கோவை வந்த முதலமைச்சரிடம் கோரிக்கை மனுவை அளித்துவிட்டு வந்த வானதி அம்மையார், "முதல்வர், தெற்கால்தான் வடக்கு வாழ்கிறது போன்ற பிரிவினை வாதம் பேசாமல் செயல்பட வேண்டும்" என்று அறிவுரை கூறியிருக்கிறாரே ?

**போண்டி : ஆமாய்யா; அடுத்தவர்க்கு அறிவுரை கூறுவதில் அம்மையார் அசாத்தியக் கெட்டிக்காரர்.**

**முதல்வர் சொன்னது, அசைக்க முடியாத பொருளாதாரப் புள்ளி விவரங்களின் அடிப்படையில். அம்மையாரின் அறிவுரை, விளம்பர மோகத்தின் அடிப்படையில்.**

**தென் மாநிலங்கள், ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு வசூலித்து வழங்கும் வரி மற்றும் இதர நிதி அளவுக்கு ஏற்றவாறா, ஒன்றிய அரசு நிதி ஒதுக்கீடு செய்கிறது ? வட மாநிலங்களுக்கு, குறிப்பாக பா.ஜ.க. மற்றும் அதன் நேசக் கட்சிகள் ஆளும் மாநிலங்களுக்கு அதிகமான நிதியும், தென் மாநிலங்களுக்கு வேண்டுமென்றே குறைவான நிதியும் ஒதுக்குகிறார்கள். சில மாநிலங்களின் கண்ணில் வெண்ணெய், வேறு சில மாநிலங்களின் கண்ணில் சுண்ணாம்பு. இவ்வாறு பேதப்படுத்துவதுதான், வடக்கு - தெற்கு பிரிவினை வாதம் !**

**இலைச் சோற்றில் அம்மையார், பூசணிக்காயை மறைத்திட எத்தனிக்கிறார்; இயலுமா ?**

---

## திருப்பூர் தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட சட்டமன்றத் தொகுதி - ஒன்றிய - நகர - பேரூர் கழக பாகமுகவர்கள் (BLA-2) கூட்டம்

மாவட்டச் செயலாளர் **இல.பத்மநாபன்** அறிவிப்பு



### 101 - தாராபுரம் (தனி) சட்டமன்ற தொகுதி BLA-2 கூட்டம்

**நாள் : 09.11.2024 சனிக்கிழமை**

| வ.எண். | ஒன்றியம்/நகரம்/பேரூர் | நேரம் | இடம் |
|---|---|---|---|
| 1. | ருத்ராவதி பேரூர் | காலை 09.00 மணி | பேரூர் கழக அலுவலகம், குண்டடம். |
| 2. | குண்டடம் மேற்கு ஒன்றியம் | காலை 10.30 மணி | ஒன்றிய கழக அலுவலகம், குண்டடம். |
| 3. | தாராபுரம் நகரம் | காலை 11.30 மணி | சிவரஞ்சனி மஹால், தாராபுரம். |
| 4. | தாராபுரம் ஒன்றியம் | மதியம் 03.00 மணி | ஒன்றிய கழக அலுவலகம், தாராபுரம். |
| 5. | சின்னக்காம்பாளையம் பேரூர் | மாலை 04.30 மணி | ஒன்றிய கழக அலுவலகம், தாராபுரம். |
| 6. | கொளத்துப்பாளையம் பேரூர் | மாலை 05.30 மணி | S.A. மினி மஹால், காளிபாளையம். |

**நாள் : 10.11.2024 ஞாயிற்றுக்கிழமை**

| வ.எண். | ஒன்றியம்/நகரம்/பேரூர் | நேரம் | இடம் |
|---|---|---|---|
| 1. | மூலனூர் பேரூர் | காலை 09.00 மணி | ஒன்றிய கழக அலுவலகம், மூலனூர். |
| 2. | மூலனூர் மேற்கு ஒன்றியம் | காலை 10.00 மணி | ஒன்றிய கழக அலுவலகம், மூலனூர். |
| 3. | கன்னிவாடி பேரூர் | காலை 11.30 மணி | ஒன்றிய கழக அலுவலகம், மூலனூர். |
| 4. | மூலனூர் கிழக்கு ஒன்றியம் | நண்பகல் 12.30 மணி | ஒன்றிய கழக அலுவலகம், மூலனூர். |

### 102 - காங்கேயம் சட்டமன்ற தொகுதி BLA-2 கூட்டம்

**நாள் : 09.11.2024 சனிக்கிழமை**

| வ.எண். | ஒன்றியம்/நகரம்/பேரூர் | நேரம் | இடம் |
|---|---|---|---|
| 1. | சென்னிமலை பேரூர் | காலை 09.00 மணி | பேரூர் கழக அலுவலகம், சென்னிமலை. |
| 2. | சென்னிமலை மேற்கு ஒன்றியம் | காலை 10.30 மணி | ஒன்றிய கழக செயலாளர் இல்லம், செலம்பக்கவுண்டன் பாளையம். |
| 3. | சென்னிமலை கிழக்கு ஒன்றியம் | காலை 11.30 மணி | அம்மன் காட்டேஜ், சென்னிமலை. |
| 4. | காங்கேயம் வடக்கு ஒன்றியம் | மதியம் 03.00 மணி | விழிய குல திருமண மண்டபம், பரஞ்சேர்வழி. |
| 5. | காங்கேயம் தெற்கு ஒன்றியம் | மாலை 04.30 மணி | தெற்கு ஒன்றிய கழக அலுவலகம், காங்கேயம். |
| 6. | காங்கேயம் நகரம் | மாலை 05.30 மணி | K.V.A திருமண மண்டபம், காங்கேயம். |

**நாள் : 10.11.2024 ஞாயிற்றுக்கிழமை**

| வ.எண். | ஒன்றியம்/நகரம்/பேரூர் | நேரம் | இடம் |
|---|---|---|---|
| 1. | முத்தூர் பேரூர் | காலை 10.00 மணி | பேரூர் கழக அலுவலகம், முத்தூர். |
| 2. | வெள்ளக்கோவில் ஒன்றியம் | காலை 11.30 மணி | கலைஞர் அறிவாலயம், வெள்ளக்கோவில். |
| 3. | குண்டடம் கிழக்கு ஒன்றியம் | மாலை 04.00 மணி | ஒன்றிய கழக செயலாளர் இல்லம், ஆறுதொழுவு. |
| 4. | வெள்ளக்கோவில் நகரம் | மாலை 05.00 மணி | கலைஞர் அறிவாலயம், வெள்ளக்கோவில். |

### 125 - உடுமலைப்பேட்டை சட்டமன்ற தொகுதி BLA-2 கூட்டம்

**நாள் : 09.11.2024 சனிக்கிழமை**

| வ.எண். | ஒன்றியம்/நகரம்/பேரூர் | நேரம் | இடம் |
|---|---|---|---|
| 1. | உடுமலைப்பேட்டை கிழக்கு ஒன்றியம் | காலை 10.30 மணி | ஒன்றிய கழக அலுவலகம், சின்னவீரம்பட்டி. |
| 2. | உடுமலைப்பேட்டை நகரம் | காலை 11.15 மணி | நகர கழக அலுவலகம், உடுமலைப்பேட்டை. |
| 3. | குடிமங்கலம் கிழக்கு ஒன்றியம் | நண்பகல் 12.30 மணி | ஒன்றிய கழக அலுவலகம், நால்ரோடு குடிமங்கலம். |
| 4. | குடிமங்கலம் வடக்கு ஒன்றியம் | மதியம் 01.00 மணி | ஒன்றிய கழக அலுவலகம், பெதப்பம்பட்டி. |
| 5. | குடிமங்கலம் மேற்கு ஒன்றியம் | மாலை 03.00 மணி | ஒன்றிய கழக அலுவலகம், பெதப்பம்பட்டி. |
| 6. | பொள்ளாச்சி தெற்கு (வடக்கு) ஒன்றியம் ஜமீன்ஊத்துக்குளி பேரூர் | மாலை 04.00 மணி | ஒன்றிய கழக செயலாளர் இல்லம், சந்திராபுரம். |
| 7. | குடிமங்கலம் தெற்கு (மத்தியம்) ஒன்றியம் சூலேஸ்வரன் பேரூர் | மாலை 05.00 மணி | கனரா வங்கி பின்புறம், கோலார்பட்டி. |
| 8. | பொள்ளாச்சி தெற்கு (தெற்கு) ஒன்றியம் சமத்தூர் பேரூர் | மாலை 06.00 மணி | செல்லப்பன் இல்லம், கஞ்சம்பட்டி. |

### 126 - மடத்துக்குளம் சட்டமன்ற தொகுதி BLA-2 கூட்டம்

**நாள் : 09.11.2024 சனிக்கிழமை**

| வ.எண். | ஒன்றியம்/நகரம்/பேரூர் | நேரம் | இடம் |
|---|---|---|---|
| 1. | உடுமலைப்பேட்டை கிழக்கு ஒன்றியம் | நண்பகல் 12.30 மணி | ஒன்றிய கழக அலுவலகம், சின்னவீரம்பட்டி. |
| 2. | மடத்துக்குளம் கிழக்கு, மேற்கு ஒன்றியம் மடத்துக்குளம் பேரூர் கொமரலிங்கம் பேரூர் சங்கராமநல்லூர் பேரூர் | மாலை 03.00 மணி | ஸ்ரீ சூர்யா திருமண மண்டபம், மடத்துக்குளம். |
| 3. | உடுமலைப்பேட்டை மத்திய ஒன்றியம், தளி பேரூர் | மாலை 05.00 மணி | ஒன்றிய கழக அலுவலகம், போடிபட்டி. |
| 4. | உடுமலைப்பேட்டை மேற்கு ஒன்றியம் | மாலை 06.30 மணி | V.P.S திருமண மண்டபம், எரசினம்பட்டி. |

# இல.பத்மநாபன்

**4ம் மண்டல தலைவர் – திருப்பூர் மாநகராட்சி**
**மாவட்ட கழகச் செயலாளர்**
**திருப்பூர் தெற்கு மாவட்ட தி.மு.க.**